Registered as a News Paper
பக்கங்கள் 04
விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM
PEOPLES DAILY
மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 புரட்டாதி 28 (14-10-1991) திங்கட்கிழமை ஓசை: 238

## சூழல் மாசடைதலினால் உணவுப்பற்றாக்குறை தோன்றும்

சூழலுக்கு ஏற்பட்டுவரும் பாதிப்பு எதிர்காலத்தில் பெரும் உணவுப்பற்றாக் குறையை ஏற்படுத்தும் என்று சூழல் பாதுகாப்பு நிபுணர்கள் எச்சரிக்கை செய் துள்ளனர். பூமியின் வெப்பநிலை அதிகரித்து வருவதே சூழலுக்கு ஏற்படும் பாதிப் புக்குப் பிரதான காரணமாகும் இந்நிலை தொடர்ந்தால் பலநாடுகள் இன்னும் இருபது வருடங்களில் நீரில் மூழ்கிவிடும் என்றும் கூறப்பட்டிருக்கின்றது. ஒவ் வொரு ஆண்டும் பூமியின் வெப்பநிலை 0.3 பாகை செண்டிகிரேற் என்ற வீழ் தத்தில் அதிகரித்து வருவதாகவும், இரண்டாயிரத்து நூறாம் ஆண்டளவில் பூமி யின் மேற்புற வெப்பநிலை 5 பாகை சென்றிகிரேற் (4ஆம் பக்கம் பார்க்க)

## காமினி மீது வாகன மோசடி புலனாய்வுதுறை விசாரணை

(கொழும்பு)

காமினி திசாநாயக்கா மகாவலி அபிவிருத்தி அமைச்சராக இருந்த போது ஒரு கோடி ரூபாய் பெறுமதியான 28 வாகனங்கள் வெளியாரின் கைக்கு இடைத்துள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த வாகனங்களில் சில இப்போது கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

மகாவலித்திட்ட வேலைகளுக்கென ஒதுக்கப்பட்ட இந்த வாகனங்கள் வெளியாருக்குச் சென்றது எப்படி என்பது பற்றி விசாரணை நடைபெறுவதாகவும்.

இது தொடர்பாக இராணுவ சார்ஜன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் சிறிலங்கா புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

## பாதுகாப்பு ஏற்பாடுகள் திருமலை நகரில் தீவிரம்

(திருக்கோணமலை)

திருக்கோணமலை நகரில் சிறிலங்கா பொலிசாரின் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப் படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பொது நூலகத்திற்கு அண்மையிலும், பெரிய முற்ற வெளிப்பகுதி சிவன் கோவிலடி ஆகிய இடங்களிலும் பாதுகாப்பு நிலைகள் அமைக்கப் பட்டுள்ளதாகவும் பிரதான பகுதிகளில் வீதித்தடைகளும் போடப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## வவுனியா வந்த புகையிரதம் நேற்றுத் தடம் புரண்டது

### நாற்பது பேர் காயம்

(கொழும்பு)

கொழும்பிலிருந்து வவுனியாவிற்கு வந்த ரயில் ஒன்று நேற்றுக்காலை தடம் புரண்டதில் நாற்பது பேர் காயமடைந்துள்ளனர்.

நேற்றுக்காலை 5-45 மணிக்கு கொழும்பிலிருந்து வவுனியாவிற்கு வந்த ரயில் மஹவ கொடவில் தடம் புரண்டது. இந்த விபத்தில் நாற்பது பேர் வரை காயமடைந்தனர்.

சுமார் 19 பேர் படுகாயமடைந்துள்ளனர் தடம்புரண்டதற்கான காரணம் அறிய விசாரணைகள் நடைபெறுகின்றன.

## இராணுவ அதிகாரிகள்

★ முல்லைத்தீவு மூன்றாம் கட்டை

# மினி முகாம் புலிகளால் தகர்ப்பு

# 21 ராணுவம் பலி; பலர் காயம்

## 8 படையின் சடலம் கைப்பற்றப்பட்டது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மூன்றாம் கட்டை இராணுவ மினிமுகாமை நேற்று அதிகாலை புலிகள் தாக்கி அழித்தனர். இருபத்தொன்றுக்குமேற் பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். பல நவீன ஆயுதங்களும், எட்டு இராணுவத்தினரின் சடலங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டன. முல்லைத்தீவு பிரதான முகாமில் இருந்து உதவிக்கு வந்த கவச வாகனம் ஒன்று முற்றாக அழிக்கப் பட்டது.

புலிகள் தரப்பில் இருவர் வீரமரணமடைந்தனர். துணைப் படை வீரரொருவர் காயமடைந்தார்.

நேற்று அதிகாலை ஒருமணியளவில் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மூன்றாம் கட்டை மினிமுகாம் புலிகளின் பலத்த தாக்குதலுக்கு உள்ளானது. முல்லைத்தீவு பிரதான முகாமிற்கு தென்மேற்கே இம்மினிமுகாம் மீது விடுதலைப்புலிகள் தொடுத்த திடீர் தாக்குதலினால் முகாமில் இருந்த இருபத்தொன்றுக்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர்.

இம்மோதலில் கொல்லப் பட்ட எட்டு இராணுவத்தினரின் சடலங்கள் உட்பட பெருமளவு ஆயுதங்கள் கைப்பற்றப் பட்டன.

முல்லைத்தீவு முகாம் அருகில் மோதல் சம்பவம் ஒன்று நடைபெற்றதை உறுதிசெய்த சிறிலங்கா பாதுகாப்பு

(4ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சரவையில் மாற்றம் ஏற்படலாம்

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவின் அரசாங்க அமைச்சரவையில் ஏற்பட்டுள்ள வெற்றிடங்களை நிரப்புவது குறித்து ஆராய நாளை அமைச்சரவைக் கூட்டம் நடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் அரசாங்கத்தை பலப்படுத்தக் கூடிய வகையில் அமைச்சரவையில் பல மாற்றங்களை ஏற்படுத்த திட்டமிட்டிருப்பதாகவும் அரசாங்க உயர் வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது.

ஐ. தே. க. அரசாங்கத்திற்கு ஏற்பட்ட அரசியல் நெருக்கடி தீர்ந்திருப்பதால் அரசை பலப் படுத்தும் ஒரு நடவடிக்கையாக அமைச்சரவையில் பல

(4ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் குற்றச்சாட்டின் முக்கியஸ்தரே முகமட் தான்

### பிரேமச்சந்திரா

(கொழும்பு)

"நாம் சபாநாயகரின் நடவடிக்கைக்கு எதிராகப் பேசுகிறோம். எமது அரசியற்குற்றச்சாட்டு மனுவின், முக்கி

...ளைப் பிரேரணையிற் கலந்து கொண்டு பேசிய பிரேமதாஸாவின் அதிருப்தியாளரான முன்

(கொழும்பு)

கொழும்பிலிருந்து வவுனியாவிற்கு வந்த ரயில் ஒன்று நேற்றுக்காலை தடம் புரண்டதில் நாற்பது பேர் காயமடைந்துள்ளனர்.

நேற்றுக்காலை 5-45 மணிக்கு கொழும்பிலிருந்து வவுனியாவிற்கு வந்த ரயில் மதவாச்சியில் தடம் புரண்டது. இந்த விபத்தில் நாற்பது பேர் வரை காயமடைந்தனர்.

சுமார் 19 பேர் படுகாயமடைந்துள்ளனர் தடம்புரண்டதற்கான காரணம் அறிய விசாரணைகள் நடைபெறுகின்றன.

## இராணுவ அதிகாரிகள் 13 பேர் பதவிநீக்கம் விசாரணை தொடர்கிறது

(கொழும்பு)

தடை விதிக்கப்பட்ட பொருட்களை வடபகுதிக்கு எடுத்துச் செல்ல அனுமதித்தமைக்காகக் குற்றம் சாட்டப்பட்டு பதின்மூன்று இராணுவ அதிகாரிகள் பதவி நீக்கம்செய்யப்பட்டுள்ளனர்.

இதனைத்தொடர்ந்து இந்த இராணுவ அதிகாரிகள் மீது விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுவருகிறது இவர்கள் மீது மேற்படி குற்றம் நிரூபிக்கப்பட்டால் இவர்களுக்கு மரண தண்டனை அல்லது இருபது வருடச் சிறைத்தண்டனை விதிக்கப்படும் என்று கூறப்படுகிறது.

## உலங்குவானூர்தி தாக்கி இரு மீனவர் பலி

ஆனையிறவு கடுக்காய்க்கடலில் மீனவர்கள்மீது சிறிலங்கா விமானப்படையின் உலங்குவானூர்தி ஒன்று கலிபர்த் தாக்குதல் மேற்கொண்டதில் இருவர் கொல்லப்பட்டதுடன் மேலும் ஒருவர் காயமடைந்திருக்கிறார்.

இத்தாக்குதலின்போது கிளாலியைச் சேர்ந்த எதிர்மன்னசிங்கம் (வயது 28), வேல்ராஜ் (வயது 20), ஆகியோர் கொல்லப்பட்டதுடன் ஜெயராசா (வயது 32) என்பவர் காயமடைந்துள்ளார். இவர்கள் சென்ற மீன்பிடிப் படகு நேற்றுக்காலை கரை சேர்ந்தது.

## 1992 வரவு - செலவுத்திட்டத்தில் துண்டுவிழும் தொகை 6962 கோடி புனர்வாழ்வு ஒதுக்கீட்டில் வெட்டு

(கொழும்பு)

சிறிலங்கா நிதியமைச்சர் டி.பி விஜயதுங்கா நேற்று முன்தினம்பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த வரவு-செலவு மதிப்பீட்டில் 6962 கோடியே 50 லட்சம் ரூபா துண்டுவிழும் தொகையாகவுள்ளது. மதிப்பீட்டின்படி மொத்தச் செலவு 15662 கோடி ரூபாவாகவும், வருமானம் 8700கோடி ரூபாவாகவும் உள்ளது.

இவ்வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்பிற்கு ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டுள்ளபோது புனர்வாழ்வு அமைச்சின் ஒதுக்கீட்டில் பெரும் வெட்டு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் 13ஆம் திகதி சிறிலங்கா பாராளுமன்றத்தில் நிதி அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட உள்ள 1992 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தின்படி புனர்வாழ்வு புனரமைப்பு நிதியை 119 கோடி ரூபாவால் குறைத்து

(4 ஆம் பக்கம் பார்க்க)

புலிகள் தரப்பில் இருவர் வீரமரணமடைந்தனர். ... படை வீரரொருவர் காயமடைந்தார்.

நேற்று அதிகாலை ஒருமணியளவில் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மூன்றாம் கட்டை மினிமுகாம்புலிகளின் பலத்த தாக்குதலுக்கு உள்ளானது. முல்லைத்தீவு பிரதான முகாமிற்கு தென்மேற்கே இம்மினிமுகாம் மீது விடுதலைப்புலிகள் தொடுத்த திடீர் தாக்குதலினால் முகாமில் இருந்த இருபத்தொன்றுக்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர்.

இம்மோதலில் கொல்லப்பட்ட எட்டு இராணுவத்தினரின் சடலங்கள் உட்பட பெருமளவு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

முல்லைத்தீவு முகாம் அருகில் மோதல் சம்பவம் ஒன்று நடைபெற்றதை உறுதி செய்த சிறிலங்கா பாதுகாப்பு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்திற்கு உதவிக்கு விரைந்த கவசவாகனமும் அழிப்பு

(முல்லைத்தீவு)

முல்லை - மூன்றாம்கட்டை மினி முகாம்மீது புலிகள் தாக்குதல் மேற்கொண்டபோது பிரதான முகாமில் இருந்து துணைக்கு விரைந்த இராணுவத்தினரைப் புலிகள் இடைமறித்துத் தாக்கினர். இத்தாக்குதலின்போது இராணுவத்தினரின் கவசவாகனம் ஒன்று முற்றாகச் சேதமடைந்தது.

அதேவேளை துணைக்கு விரைந்த இராணுவத்தினரில் பலர் மிதிவெடிகளில் சிக்கிக் கால்களை இழந்தனர்.

இதைத் தொடர்ந்து இராணுவத்தினரின் முயற்சி தடுத்து நிறுத்தப்பட்டது.

## பல்வேறு நவீன ஆயுதங்கள் புலிகளால் மீட்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மூன்றாம் கட்டை என்ற இடத்தில் இருந்த சிறிலங்கா மினி இராணுவ முகாம் மீது நேற்று அதிகாலை விடுதலைப்புலிகள் நடாத்திய தாக்குதலின்போது விடுதலைப்புலிகளால் பெருமளவு நவீன ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

- ★ மினிமி எல். எம். ஜி. ரக துப்பாக்கிகள் - 3
- ★ இதற்குரிய மேலதிக சுடுகுழல்கள் - 3
- ★ ஆர். பி ஜி - 1,
- ★ இதற்குரிய எறிகணைகள் - 14
- ★ புறப்ளர்கள் - 14
- ★ 40 எம். எம். கைத்துப்பாக்கி - 1
- ★ இதற்குரிய எறிகணைகள் - 8
- ★ எவ் என் சி ரகத்துப்பாக்கிகள் - 12
- ★ இதற்குரிய ரவைக்கூடுகள் - 38
- ★ ரி. 56 ரகத்துப்பாக்கி - 1
- ★ 52 எம். எம். மோட்டோர் - 1
- ★ இதற்குரிய எறிகணைகள் - 61
- ★ தொலை நோக்கி - 1
- ★ தொலைத்தொடர்புக் கருவி - 1
- ★ ஜே. ஆர் ரகக் கைக்குண்டு - 1
- ★ 5.56ரக ரவைகள் - 10, 200
- ★ 5.56 ரக ரவைத்தொடர் - 5044
- ★ 7.62 நடுத்தர ரவைகள் - 950

ஆகிய நவீன ரக ஆயுதங்களே விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டிருக்கின்றன.

## வீரமரணம்

### லெப். கிரி லெப். நேசன்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மூன்றாம் கட்டை சிறிலங்கா இராணுவ முகாம் மீதான தாக்குதலின் போது லெப். கிரி (மாரிமுத்து வசந்தகுமார் - வேலணை), லெப் நேசன் (சின்னத்தம்பி சற்குணசீலன் -வற்றாப்பளை) ஆகிய இரு போராளிகள் வீரமரணமடைந்துள்ளனர். இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

## அரசியல் குற்றச்சாட்டின் முக்கியஸ்தரே முகமட் தான் பிரேமச்சந்திரா

(கொழும்பு)

''நாம் சபாநாயகரின் நடவடிக்கைக்கு எதிராகப் பேசுகிறோம். எமது அரசியற்குற்றச்சாட்டு மனுவின், முக்கியஸ்தர் அவரே. எம்மை இப்படிச் செய்யத் தூண்டியவர் அவரே. எமக்கு வழிகாட்டியவர் அவரே இவ்வாறு சபாநாயகர் எம். எச். முகமட்டிற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கலந்து கொண்டு பேசியபிரேமதாஸாவின் அதிருப்தியாளரான முன்னாள் கைத்தொழில் அமைச்சர் பிரேமச்சந்திரா தெரிவித்தார்.

இம்பிரேரணை மீது கலந்து கொண்டு பேசிய லலித்அத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ. தே. கட்சி பரவலாக கூட்டம் நடத்த ஏற்பாடு

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவிற்கு எதிரான அரசியல் குற்றச்சாட்டு தொடர்பாக மக்களுக்கு விளக்குவதற்காக பொதுக் கூட்டங்களை பரவலாக நடத்துவதென ஐக்கியதேசியக் கட்சி தீர்மானித்துள்ளது.

இதே நேரம் கண்டியில் வரும் 19 ஆம் திகதி மக்கள் வெற்றிப் பொதுக்கூட்டம் நடைபெறும் என்றும் இந்தக்கூட்டத்தில் சதியாளர்களின் திட்டம் அம்பலமாக்கப்படும் எனவும் ஐ.தே.க. தெரிவித்துள்ளது.

## வடக்கு - கிழக்கில் புலிகள் ஆயுதங்களைக் கைவிட்டால் தேர்தல் -பிரேமதாசா

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் இயக்கத்தினர் ஆயுதங்களைக்கைவிட்டு ஏனைய கட்சிகளுடன் சேர்ந்து தேர்தலில் போட்டியிட முன்வந்தால், வடக்கு - கிழக்குப் பகுதிகளில் தேர்தலுக்கு தான் தயாராக இருப்பதாக சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா தெரிவித்தார்.

## இந்தியாவை இணங்குமாறு தூதர் மனைவி வற்புறுத்து

(டெல்க்)

ருமேனிய ராஜதந்திரியைக் கடத்திய காலிஸ்தான் விடுதலை இயக்கத்தினரின் கோரிக்கைக்கு இந்திய அரசு இணங்காவிட்டால் தான் உண்ணாவிரதம் இருக்கப் போவதாக ராஜதந்திரியின் மனைவி கதரீனா தெரிவித்துள்ளார்.

முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் வைத்தியாவைக் கொலை செய்ததாகச் சிறை வைத்திருக்கும் மூவரையும் விடுதலை செய்தால் பணயக் கைதியாக வைத்திருக்கும் ராஜதந்திரியை விடுதலை செய்வதாகக் கடத்தல்காரர் நிபந்தனை தெரிவித்துள்ளனர் அல்லது அவரைக் கொலை செய்வதாக அறிவித்திருந்தது தெரிந்ததே.

# நாதஸ்வர மேதை என். கே. பத்மநாதனின் மணிவிழாச் சிறப்பிதழ்

## மரபு பிறழா மங்கள வாத்தியத்துக்கு மணிவிழா

நாதஸ்வரகான கலாநிதி, ஏழிசை வாரிதி, கலாசூரியா, ஏகச்சக்ராதிபதி நா. க. பத்மநாதன் மணிவிழாக் காண இருப்பதையிட்டு இளங்கலைஞர் மன்றம் மிகுந்த மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறது. திரு. பத்மநாதன் அவர்களுக்கு மணிவிழா எடுப்பது மரபுபிறழாத மங்கள வாத்தியத்துக்கே மணி விழா எடுப்பது போன்றது.

இந்த நாட்டில் சுத்தமான சாஸ்திரீய இசை மரபின் தூய்மைக்கும் பெருமைக்கும் மங்களவாத்தியம் பெருமளவு துணைசெய்திருக்கிறது என்பது யாரும் ஒப்பக் கூடியது. அந்த வகையில் அவ்வாத்தியத்துக்கே உரிய சம்பிரதாயங்களையும் கட்டுப்பாடுகளையும் பேணுவதோடமையாது. இசை உலகிலும் அதி உன்னதமான நிலையில் உள்ளவர் நாதஸ்வர கானகலாநிதி. அவரோடு பல தடவைகள் சேர்ந்து வாசித்த தவில் மேதை அமரர் சின்னராசா அவர்கள் அடிக்கடி குறிப்பிட்டது போன்று, இந்தியாவிலும் மிக உயர்வாக மதிக்கப்படுகிற, இந்த நாட்டைச் சேர்ந்த ஒரே நாதஸ்வரக் கலைஞர் என்ற பெருமைக்குரியவர் இவர்.

லண்டன் தொலைக்காட்சி நிறுவனத்தினரின் மரபுகளுக்கு மாறாக, தாம் வழக்கமாக அணியும் - கலைஞர்களுக்குரிய ஆடைகளையே அணிந்து சென்று இசைநிகழ்ச்சி வழங்கியமை பாரம்பரியங்களில் அவருக்குள்ள பற்றுக்கு ஒரு சான்று.

மங்கள வாத்திய சம்பிரதாயங்களோடு பூரணமான இசை நுணுக்கங்களைக் கொண்ட நிறைவான வாசிப்பு அவருடையது. தூய்மையான, செழுமையான ஸ்வர சுத்தமான இராக ஆலாபனை நுட்பமான தாளபேதங்கள் கொண்ட பல்லவி வாசிப்பு, மல்லாரி போன்ற உற்சவ பாரம்பரியங்கள், சமய சந்தர்ப்பங்களுக்கேற்ற இராக-உருப்படித் தெரிவு ஆகிய அனைத்தும் நிறைந்த அவருடைய வாசிப்பின் இரகசியத்தை இளங்கலைஞர்கள் அவசியம் தெரிந்து பின்பற்றவேண்டும் என்று இளங்கலைஞர் மன்றம் விரும்புகிறது.

ஆசாரமான, நேர்மையான வாழ்க்கை முறை எப்போதும் கற்றுக் கொள்ள விரும்பும் மனப்பாங்கு, கடுமையான சாதகம் ஆகியவற்றின் அடிப்படையில் கடந்த நாற்பதாண்டுகளுக்கு மேலாக அவருடைய நாதசேவை அமைந்திருக்கிறது. இந்தச் சேவையை அவர் இறைவனுக்குரிய நாத ஆராதனையாகவே செய்து வந்துள்ளார் என்பதை அவரை அறிந்தவர் உணர்ந்து கொள்வர்.

அவர் மேலும் பல்லாண்டுகள் - நூறாண்டு வரை — வாழ்ந்து இளங்கலைஞர்களுக்குத் தொடர்ந்தும் வழிகாட்டியாக இருக்க வேண்டும் என்று அவர் வணங்கும் நல்லை முருகப் பெருமானை நாமும் வேண்டி வாழ்த்துவதில் பெருமகிழ்வெய்துகிறோம்.

— பொன். சுந்தரலிங்கம்
தலைவர்
இளங்கலைஞர் மன்றம்

## வாழ்க்கைக் குறிப்புகள்



**பெற்றோர்:**
என். கந்தசாமி - பரிமளம்

**பிறப்பு:-** 1931-09-20

**குருமார்:**
தந்தையார் என். கந்தசாமி, காவி கந்தசாமி சீர்காழி எஸ். பி எம். திருநாவுக்கரசுபிள்ளை, பி. கிருஷ்ணமூர்த்திபிள்ளை மாவிட்டபுரம் இராசா, பி. எஸ். ஆறுமுகம்பிள்ளை.

**திருமணம்:**
18-01-1957

**மனைவி:-** நாகேஸ்வரி

**பட்டங்கள்:**
நாதஸ்வர கானகலாநிதி, ஏழிசை வாரிதி, கலா சூரியா, ஏகச்சக்ராதிபதி.

**குழந்தைகள்:-** 7 பேர்

**சென்ற நாடுகள்:**
லண்டன், பாரிஸ், சிங்கப்பூர், மலேசியா, இந்தியா.

**வாசித்த முக்கிய கச்சேரிகள்:-**
மியூசிக் அக்கடமி, லண்டன் தொலைக்காட்சி, 4 ஆவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு, மதுரை.

**சேர்ந்துவாசித்த பிரபல்ய வித்துவான்கள்:**
வலங்கைமான் சண்முகசுந்தரம், நாச்சிமார் கோயில் இராகவப்பிள்ளை, தெட்சணாமூர்த்தி, சின்னராசா, கே. கணேசபிள்ளை.

**ஆஸ்தான வித்துவான்:**
நல்லூர் முருகன், தேவஸ்தானம்.

## மணி விழா நிகழ்ச்சிகள்

இடம்: நல்லைஞான சம்பந்தர் ஆதீனக் கலாமண்டபம்.

**14.10.91 திங்கள்**
மாலை 2-00 மணி

தலைமை: திரு. அ. துரைராசா (துணைவேந்தர், யாழ்ப்பல்கலைக்கழகம்)

### பண்ணிசை

வாழ்த்துரைகள்: திரு. பொ. பாலசிங்கம் (ஆணையாளர் யாழ். மாநகர சபை)
திரு. க. சொக்கலிங்கம்
கலாநிதி இ. பாலசுந்தரம் (தமிழ்த்துறை யாழ் பல்கலைக்கழகம்)
திரு பஞ்சாபிகேசன்
கவிஞர் சோ. பத்மநாதன்

### கலைநிகழ்ச்சிகள்

**15.10.91 செவ்வாய்**
மாலை 2-00 மணி

தலைமை: கவிஞர் புதுவை இரத்தினதுரை (பொறுப்பாளர் விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம்)

### மங்கள இசை

வாழ்த்துரைகள்: திரு. சு. டிவகலாலா (உள்ளூராட்சி உதவி ஆணையாளர்)
வண பிதா பிரான்சிஸ் ஜோசப் அடிகள்
கலாநிதி சி. க. சிற்றம்பலம் (வரலாற்றுத்துறை யாழ். பல்கலைக்கழகம்)
சங்கீதபூஷணம் ச. பாலசிங்கம்
கவிஞர் இ. முருகையன்
திரு. க. சிவசுப்பிரமணியம்
கலை நிகழ்ச்சிகள்

**16.10.91 புதன்**
மாலை 2-00 மணி

தலைமை: இரா சுந்தரலிங்கம் (கல்வியதிபதி வடமாநிலம்)

### மங்கள இசை

வாழ்த்துரைகள்: பேராசிரியர் சி. சிவஞானசுந்தரம் (நந்தி)
திரு. க. சிவராமலிங்கம் பிள்ளை
மகாராஜஸ்ரீ சு. து. சண்முகநாதக் குருக்கள்
பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை (கலைப் பீடாதிபதி யாழ். பல்கலைக்கழகம்)
திரு. குழந்தை சண்முகலிங்கம் (நுண்கலைத் துறை யாழ். பல்கலைக் கழகம்)
பிரம்மஸ்ரீ ந. வீரமணிஐயர்
திரு. பொன். மதிமுகராசா

### இசையரங்கு

### பட்டி மண்டபம்

பொருள்: பெண்மை ஆற்றலில் பெரிதும் சிறந்தவள் கண்ணகியா? சீதையா?
நடுவர் திரு. இ. ஜெயராஜ் (கம்பன்கழகம்)

## வாழ்க பல்லாண்டு!

சண்முகப் பிரியன் ஆகி உன் ஒருகி
சந்நிதி தோறும் நின்றழகுப்
பண்ணிசைத் தூதும் பத்மநாதப்பேர்ப்
பண்பினன் மணிவிழா இன்று
கண்ணுறக் கண்டு களிப்படைகின்றோம்!
கலைஞர்கள் நல்லைமா நகரை
விண்ணக மாக்கும் வேளை; நண்பனுக்கு
வாழ்த்துரை தந்திட விழைந்தோம்!

கற்பனை நாத வானைத் தேறிக்
காற்றிடை மிதந்துவந் திடும், அவ்
வற்புதம் படைக்கும் அரும்பெருங் கலைஞ!
அருணைப் போலவா சிப்பாய்!
நிற்பவை, இயங்கு பவையும் உன் இசையால்
நெகிழநீ புரியுமிச் சித்து
முற்பிற வியிலே முருகனைத் தேனால்
திருமுழுக் காட்டிய பயனோ?

கந்தவேள்வீதி உலாவரு கையில், உன்
கானமா மழைமுழுக் காட்டும்!
அந்தவே ளையில்மெய் யடியர்ஆ யிரம்பேர்
ஆடுவர், பாடுவர், அகலார்.
சிந்தையா காக உருகுவர், மேனி
சிலிர்ப்பர், கண்ணீர் மல்க நிற்பர்!
விந்தைசெய் கலைஞர் வேந்தனே வாழ
வேண்டும்நீ இன்னும்பல் லாண்டு!

பல்லவி பத்ம நாதன்கை துளையில்
பரவசம் ஏற்படும்; உடம்பு
புல்லரித் தின்ப வெறிதலைக் கேற
புலனெலாம் செவிகொள நிற்போம்!
மல்லரி எடுத்து மேடையில் ஊதும்
வல்லமை, மற்றிவன் பொழியும்
சொல்லவும் அரிய லயநுணுக் கங்கள்
கரும்புசுகம், தொடர்கபல் லாண்டு!

## ஆசியுரை

கலைரசிக மெய்யன்பர்களே,

மணிவிழாக்காணும் நாதஸ்வர மேதை திரு N K பத்மநாதனும் அவரின் பாரியாரும் நல்லை ஆதீனத்தோடு மிக நெருங்கிய தொடர்புடையவர்கள். ஆதீன விசேட நிகழ்ச்சிகளில் தவறாது கலந்து கொண்டு எம்மை ஆதரித்தவர்கள் அவர்களை யாம் மறக்கவே முடியாது இது உண்மை இறையருளுடையார்க்கே இத்தகைய இன்பவாழ்வு வந்தமையும். ஆளுமையாளராக கலாசூரி என்ற புகழாரம் சூட்டப்பெற்று கௌரவிக்கப் பெற்ற ஓரே ஒரு கலைஞர். அவர்கள் ஆறுமுகப்பெருமான் அருள்பெற்ற அருணாசர் எனில் மிகையாகாது.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த
பரமாசார்ய ஸ்வாமிகள்
ஸ்ரீலஸ்ரீ குருமஹா சந்நிதானம்

## வாழ்த்துரை

மணிவிழா நாயகர் திரு என். கே. பத்மநாதன் அவர்களையும், துணைவியாரையும் மனமார வாழ்த்துவதில் எமது தேவஸ்தானம் பெருமகிழ்ச்சி அடைகின்றது. நாதஸ்வரக்கலாநிதி என்றும், கலாசூரி என்றும், நாதஸ்வர மேதை என்றும் தமி...

நாதஸ்வர மேதை, கலாசூரி
திரு. என். கே. பத்மநாதன் அவர்களின்
மணிவிழா சிறப்புற வாழ்த்துகிறது

தாயகத்தோடு பூரணமான
இசை நுணுக்கங்களைக்
கொண்ட நிறைவான வாசிப்பு

இளங்கலைஞர் மன்றம்

நல்லூர் முருகனே,
தேவஸ்தானம்.

நாதஸ்வர மேதை, கலாசூரி

திரு. என். கே. பத்மநாதன் அவர்களின்

## மணிவிழா சிறப்புற வாழ்த்துகிறது

# கணேசன் றேட்ஸ்

கந்தசுவாமி கோவில் சந்தி, (B/3328) கே. கே. எஸ். வீதி, இணுவில்.

விந்தைசெய் கலைஞர் வேந்தனே வாழ
வேண்டும்நீ இன்னும்பல் லாண்டு!

பல்லவி பத்ம நாதன்கை துளையில்
பரவசம் ஏற்படும்; உடம்பு
புல்லரித் தின்ப வெறிதலைக் கேற
புலனெலாம் செவியென நிற்போம்!
மல்லரி எடுத்து மேடையில் ஊதும்
வல்லமை, மற்றிவன் மொழியும்
சொல்லவும் அரிய லயநுணுக் கங்கள்
தரும்சுகம், தொடர்கபல் லாண்டு!

-சோ. பத்மநாதன்

பரமாசார்ய ஸ்வாமிகள்
ஸ்ரீலஸ்ரீ குருமஹா சந்நிதானம்

## வாழ்த்துரை

மணிவிழா நாயகர் திரு என். கே. பத்மநாதன் அவர்களையும், துணைவியாரையும் மனமார வாழ்த்துவதில் எமது தேவஸ்தானம் பெருமகிழ்ச்சி அடைகின்றது. நாதஸ்வரக்கலாநிதி என்றும், கலாசூரி என்றும், நாதஸ்வர மேதை என்றும் தமிழுலகம் பாராட்டும் சிறப்பு திரு. "என். கே. ப" அவர்களுக்கு உண்டு.

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம்

## கிராமிய வங்கி சேமிப்புக் கணக்குகள் மீளாய்வு செய்தல்

மேற்படி எமது சங்கத்தின் கிராமிய வங்கியில் சேமிப்புக் கணக்குகள் வைத்திருப்பவர்கள் அவர்களின் சேமிப்பு புத்தகங்களுடனும், சேமிப்பு வைத்திருப்பதற்கான ஏனைய உறுதி செய்யக் கூடிய தஸ்தாவேஜுக்களுடனும் பி. எஸ். சேவிஸ் நிலையத்தில் இயங்கும் எமது தலைமைக் காரியாலயத்திற்கு 21-10-91 — 25-10-91 திகதிக்கு முன் சமுகமளிக்கவும்.

- பொது முகாமையாளர்

### சங்க பொதுச்சபை உறுப்பினர்களுக்கு

தற்போது எமது சங்கமும், பொதுச்சபை உறுப்பினர்களும் இடம் பெயர்ந்து உள்ளதால் அவர்களது வதியும் இடம் தெரியாததால் உறுப்பினர்களுடன் தொடர்பு கொள்வதில் சிரமமாகவுள்ளது. எனவே அவர்கள் தங்கள் முகவரியை அறியத் தருமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

- செயலாளர்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம்
பி. எஸ். சேவிஸ்,
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(B-3318)

## வரி விளம்பரம்

### ரைப்ரைட்டர்

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும், சிறந்த முறையில் திருத்தவும், மற்றும் தமிழ்- ஆங்கிலம் ரைப்பிங் வேலைகளுக்கும்: பியூடோ, 39/17, மின்சார நிலைய வீதி 3-ம் ஒழுங்கை. யாழ்ப்பாணம். (R/1832)

### தவறிவிட்டது

திருநெல்வேலிச் சந்திக்கும் திப்விதிக்கும் இடைப்பட்ட பலாலி வீதியில் கடந்த 12ஆம் திகதி நீலநிறமுடைய டெனிம் புத்தகப்பை ஒன்றும் சிலநூலகப்புத்தகங்களும் தவறவிடப்பட்டுவிட்டன. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (B/3324)

### தாண்டிக் குளத்தில் இருவர் கைது

(கொழும்பு)

தடைசெய்யப்பட்ட பொருள்களை வடபகுதிக்கு எடுத்துச்சென்ற இருவர் கடந்த செவ்வாய்க்கிழமை தாண்டிக்குளம் சோதனை சாவடியில் தடுத்து வைக்கப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# நினைவு கூருகின்றோம்!

## 1991 - 10 - 14

1987ஆம் ஆண்டு இதேதினத்தில் வீரமரணமெய்திய

**சர்வா** (கணபதிப்பிள்ளை பரராஜசிங்கம் - கண்டாவளை)

அரியாலையில் இந்தியப்படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் வீரமரணமெய்திய

**செல்வம்** (தியாகராஜா பிரகலாதன் - அரியாலை)

கோப்பாயில் இந்தியப்படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய

**லெப். இளங்கோ** (மார்க்கண்டு சோதிலிங்கம் - காரைநகர்)

கோப்பாய், புன்னாலைக்கட்டுவன் பகுதிகளில் இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 4 தமிழர்கள்

1988ஆம் ஆண்டு யாழ். வெலிங்டன் சந்தியில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட எமது ஆதரவாளர்

**வி. கதிர்காமநாதன்** (கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்)

சுன்னாகத்தில் தேசவிரோதிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட எமது ஆதரவாளர்

**கஜன்** (பொன்னையா சிறிதரன் உடுவில் கிழக்கு, சுன்னாகம்)

1990ஆம் ஆண்டு தமிழீழக்கடற் பரப்பில் (பூநகரி, கிரிகுடா) சென்று கொண்டிருந்த படகுமீது உலங்கு வானூர்தியிலிருந்து சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட தமிழ்ப் பயணி

திருநெல்வேலிப் பொதுச் சந்தை, உடுப்பிட்டிச்சந்தி ஆகிய பகுதிகளின் மீது சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் கொல்லப்பட்ட பெண் உட்பட 5 தமிழர்கள்

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B/3320)

## ✻ சிந்தனைக்கு ✻

நோய்வாய்ப்பட்டிருக்கையில், தான் நலமுடன் இருப்பதாக எண்ணுபவன், அழியும் பேராபத்தில் இருக்கிறான்.

-தாமஸ்ஃபுல்லர்


# ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம். 14-10-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025 - 2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05


## தமிழருக்கு எதிரான 1992 வரவு செலவு திட்டம்

சிறிலங்காவின் 1992ஆம் ஆண்டிற்கான மொத்தச் செலவினம் 15662 கோடியே 50லட். (156.5 பில்.) ரூபா ஆகும். மொத்த வருமானம் 8700 கோடி (87பில்) ரூபா ஆகும். துண்டு விழும் தொகை 6962 கோடி (69.6 பில்) ரூபாவாகும்.

இந்த செலவீட்டில் சுமார் 1525 கோடி (15.3 பில்) பாதுகாப்புச் செலவினத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தச் செலவீடானது நடப்பு வருட பாதுகாப்புச் செலவீட்டைக் காட்டிலும் சுமார் 364 கோடி (3.6 பில்) அதிகமானதாகும். அதாவது நடப்பு வருடத்தை விட 31 வீத அதிகரிப்பைக் காட்டுவதாகும்.

அதேவேளை அடுத்த வருடங்களுக்கான சகல அமைச்சுக்களுக்குமான செலவீடுகள் அதிகரித்துள்ள அதே வேளை புனர்வாழ்வு புனரமைப்பிற்கான செலவீடுகளில் மட்டும் வெட்டு விழுந்துள்ளது. 1991ஆம் ஆண்டில் 721 கோடியாக இருந்த புனர்வாழ்வு. புனரமைப்பிற்கான செலவீட்டு ஒதுக்கீடு இந்த வருடம் 601 கோடியாக குறைக்கப்பட்டுள்ளது. அதாவது சுமார் 120 கோடி ரூபா முன்னைய ஆண்டை விட குறைவாகும்.

இவற்றை நோக்கும்போது சிறிலங்கா அரசாங்கத்தின் அடுத்த ஆண்டிற்கான செலவு ஒதுக்கீடுகள் இலங்கைத்தமிழருக்கு எதிரான ஒரு ஒதுக்கீடு என்றே சொல்லவேண்டும்.

அந்நியச் செலாவணி பற்றாக்குறையினாலும், வெளிநாட்டுக் கடன் பளுவினாலும், பணவீக்கத்தினாலும் அல்லலுறும் சிறிலங்கா அரசாங்கம் அடுத்த வருடத்திலும் தமிழருக்கு எதிரான போருக்காகவே பெரும்

## எறிகணை வீச்சு மக்கள் இடம் பெயர்வு

(புங்குடுதீவு)

புங்குடுதீவுப் பகுதிமீது நயினாதீவு சிறிலங்கா கடற்படை முகாமில் இருந்தும் கடலில் இருந்தும் தீவிர ஷெல் பீரங்கி தாக்குதல்கள் நடாத்தப்படுவதை அடுத்து கரையோரப் பகுதிகளில் வாழும் மக்கள் பெருவாரியாக இடம் பெயர்ந்து வருகின்றனர். கடந்த மூன்று தினங்களாக இரவு நேரங்களில் கண்மூடித்தனமாக மேற்படி தாக்குதல்கள் நடாத்தப்பட்டதைத் தொடர்ந்து மக்கள் அச்சம் காரணமாக இடம்பெயர்ந்து வருகின்றனர். குறிகட்டுவான் துறை, இறுப்பிட்டி ஆகிய இடங்களை நோக்கி நடத்தப்பட்ட தாக்குதல்களினால் அப்பகுதியில் உள்ள அநேக வீடுகள் பலத்த சேதம் அடைந்துள்ளன. 12 ஆம் திகதி சனிக்கிழமை மக்கள் சாரிசாரியாக இடம்பெயர்ந்து சென்றதைக் காண முடிந்தது. (22)

## அரச கரும மொழிகளைச் செயற்படுத்தபுதிய திட்டமாம்

(கொழும்பு)

தமிழ், சிங்களம் ஆகிய அரச கருமமொழிகளை செயல்படுத்துவதற்கானபுதிய திட்டமொன்றை பொது நிர்வாக அமைச்சு தயாரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் திட்டத்திற்காக கனடிய அரசாங்கம் ஐந்து கோடி முப்பது லட்சம் வழங்கியுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## அமேதியில் போட்டியிட சோனியா மறுப்பு

(டில்லி)

அமேதி தொகுதி இடைத்தேர்தலில் லோக்சபாவிற்குப் போட்டியிடச் சோனியா காந்தி மறுத்து விட்டார்.

நேற்று காலை முன்தினம் சோனியா காந்தியைச் சந்தித்த பிறகு பத்திரிகையாளருடன் சாதாரண முறையில் பேசிக்கொண்டிருந்த இந்திரா காங்கிரஸ் தலைவர் பி. வி. நரசிம்மராவ் சோனியாகாந்தி தேர்தலில் போட்டியிடமாட்டார் என்று தெரிவித்தார்.

இதேவேளை நந்தியால் லோக்சபாத் தேர்தலில் பிரதமர் பி. வி. நரசிம்மராவுக்கு எதிராக ஒரு வேட்பாளரை நிறுத்துவது பற்றி தேசியமுன்னணிக்கட்சிகள் இன்னமும் ஆலோசனை கலந்து வருகின்றன; ஒரு முடிவுக்கு வரவில்லை என்று கே. சி. உன்னிக் கிருஷ்ணன் நேற்று முன்தினம் கூறியுள்ளார்.

புது டில்லியில் செய்தியாளர் மத்தியில் பேசிய அவர் நந்தியால் தொகுதியில வேட்பாளரை நிறுத்தப்போவதில்லை என்று தேசிய முன்னணித் தலைவர் என். டி. ராமராவ் கூறியிருப்பது அவரது சொந்தக் கருத்து என்றார்.

## ஐந்து ஆண்டு காலம் காங்கிரஸ் பதவி வகிக்கும்

- நரசிம்மராவ்

(டில்லி)

அனும் இந்திரா காங்கிரஸ் கட்சியே ஐந்து ஆண்டு காலத்

ருக்கும் தனது நன்றியைத் தெரிவித்தார்.

அதைத் தொடர்ந்து

## அணுகுண்டை விட சக்தி வாய்ந்த ஹைட்ரோஜின் குண்டு தயாரிக்க ஈராக் முயன்றது

(நியூயோர்க்)

ஈராக் ஹைட்ரோஜின் குண்டு அல்லது அணு குண்டை விட அதிக சக்தி வாய்ந்த வெப்ப அணு குண்டை உற்பத்தி செய்யும் முயற்சியில் ஈடுபட்டிருந்ததாக சர்வதேச அணுசக்தி ஏஜென்சி தெரிவித்துள்ளது.

இதே போலவே ஈராக் சென்ற ஐ. நா. பரிசோதனைக் குழுத் தலைவரான டேவிட் கேயும் தெரிவித்துள்ளார்.

ஹைட்ரோஜின்குண்டு அணுகுண்டுகளை விட அதிசக்தி வாய்ந்தது. 1945 ஆம் ஆண்டு ஹிரோஷிமா, நாகசாகி மீது போடப்பட்ட அணுகுண்டை விட ஹைட்ரோஜின் குண்டு அதிக சக்தி வாய்ந்தது.

## அ. தி. மு. க.- காங்கிரஸ் கூட்டுத் தொடரும்

- கல்பனாத்ராய்

(சென்னை)

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் இந்திரா காங்கிரஸ் கட்சிக்கும் இடையேயான கூட்டு தொடரும் என்றும், அவை மேலும் வலுப்படுத்தப்படும் என்றும் மத்திய எரிசக்தித் துறை அமைச்சர் கல்பனாத்ராய் தெரிவித்துள்ளார்.

சென்னையில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய கல்பனாத்ராய் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவிற்கு எல்லாத் துறைகளிலும் குறிப்பாக விடுதலைப் புலிகள் பிரச்சினையைத் தீர்ப்பதில் எல்லா உதவியும் அளிப்பதாகவும் வாக்குறுதி அளித்தார்.

## அயோத்தி பிரச்சினை அறிக்கை சமர்ப்பிக்க நரசிம்மராவ் கோரிக்கை

(டில்லி)

அயோத்தியாவில் பிரச்சினைக்கு உட்பட்ட பகுதியை ஒட்டியுள்ள நிலத்தை கையகப்படுத்துவதான உத்தரப் பிரதேச அரசின் நடவடிக்கை பற்றிய அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறு மத்திய அரசு மாநில அரசைக் கேட்டுள்ளது.

பத்திரிகைத் துறையினரிடம் இதனைத் தெரிவித்த இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் மாநில அரசின் இந்த அறிக்கை கிடைக்கப்பெற்றதும் அதற்கேற்ப உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் தேவைக்கேற்ப இந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

பாபர் மசூதி இயக்க ஒருங்கிணைப்பு நிர்வாகக்குழு. மற்றும் அகில இந்திய பாபர் மசூதி செயல் நிர்வாகக் குழுவின் பிரதிநிதிகள் ஆகியோர் நேற்று முன்தினம் இந்திய உள்துறை அமைச்சரை சந்தித்து ராமஜென்மபூமி-பாபர் மசூதி பிரச்சினை குறித்துப் பேசியதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் பாபர் மசூதிக்கு உட்பட்ட பகுதியை உத்தரப் பிரதேச அரசு கையகப்படுத்துவது தொடர்பான தமது கவலையையும் அவர்கள் உள்துறை அமைச்சரிடம் தெரிவித்தனர்.

## நவராத்திரி பூஜை

(நச்சமோட்டை)

கொழும்புத்துறை மேற்கு வதிரி பீட விநாயகர் ஆலயத்தில் நவராத்திரி பூஜை

...படுகின்றது. அதாவது சுமார் 120 கோடி ரூபா முன்னைய ஆண்டை விட குறைவாகும்.

இவற்றை நோக்கும்போது சிறிலங்கா அரசாங்கத்தின் அடுத்த ஆண்டிற்கான செலவு ஒதுக்கீடுகள் இலங்கைத்தமிழருக்கு எதிரான ஒரு ஒதுக்கீடு என்றே சொல்லவேண்டும்.

அந்நியச் செலாவணி பற்றாக்குறையினாலும், வெளிநாட்டுக் கடன் பழுவினாலும், பணவீக்கத்தினாலும் அல்லலுறும் சிறிலங்கா அரசாங்கம் அடுத்த வருடத்திலும் தமிழருக்கு எதிரான போருக்காகவே பெரும் ஒதுக்கீடு ஒன்றைச் செய்துள்ளது. சுமார் 7000 கோடி ரூபா துண்டு விழுகின்ற வேளையிலும் பாதுகாப்புச் செலவினத்தை 31 வீதத்தால் அதிகரித்துள்ளமை சிறிலங்கா அரசாங்கம் சிறிலங்காவின் பெரும் நிதிவளத்தை தமிழருக்கு எதிராகத் திருப்பி விட்டுள்ளது என்றே சொல்லுதல் வேண்டும்.

இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காண முடியாது, அரசியல் தீர்வே காணப்படவேண்டும் எனப் பல்வேறு வெளிநாட்டுச் சக்திகள் பலவும் வற்புறுத்திய போதும் இராணுவத் தீர்வு ஒன்றை நாடுவதையே பட்ஜெட்டில் இராணுவச் செலவீடு மேலும் மூன்றில் ஒரு பங்கு அதிகரித்திருப்பதைக் காட்டுகின்றது.

அதேவேளை புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சிற்கான செலவீடும் குறைக்கப்பட்டுள்ளது. வடக்கு, கிழக்கில் யுத்தம் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. அழிவுகள் குறிப்பிடப்பட முடியாத அளவிற்குப் பெருகி வருகின்றன எட்டு லட்சம் மக்கள் அகதிகளாகவுள்ளனர். ஆனால் புனர்வாழ்வு, புனர்நிர்மாண அமைச்சிற்கான செலவீட்டை சிறிலங்கா அரசாங்கம் குறைத்துள்ளது.

இதேவேளை தமிழ் அகதிகளுக்கான நிவாரணத் தொகையைத்தற்பொழுது குறைத்துள்ள சிறிலங்கா அரசாங்கம் அடுத்த வருடத்தில் அதற்கான செலவீட்டை மேலும் குறைக்கக் கூடிய நிலையை செலவீட்டு ஒதுக்கீட்டில் இருந்து தெரிகின்றது. சகல துறைகளுக்கும் ஒதுக்கீட்டை அதிகரித்த சிறிலங்கா அரசாங்கம் இந்தத் துறைக்கு மட்டும் ஒதுக்கீட்டை வெட்டியமை இந்தத் துறையுடன் தற்பொழுது பெருமளவு தமிழரே சம்பந்தப்பட்டுள்ளமையே காரணமாகும்.

ஒட்டு மொத்தமாக இந்த 1992ஆம் ஆண்டு செலவு ஒதுக்கீடு தமிழருக்கெதிரான ஒரு செலவு ஒதுக்கீடு ஆகும். ஒரு புறத்தில் இராணுவச் செலவீட்டை அதிகரித்து இராணுவ அடக்கு முறையை விஸ்தரிக்கவும், மறுபுறம் தமிழருக்கு நிவாரண உதவிகளை நிறுத்தியும், பொருளாதாரத் தடைகளை ஏற்படுத்தியும் இன அழிவிற்கு வித்திடுவதாகவே சிறிலங்காவின் அடுத்த ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் உள்ளது.

மா பி. வி. நரசிம்மராவுக்கு ...றார்.

## ஐந்து ஆண்டு காலம் காங்கிரஸ் பதவி வகிக்கும்

### - நரசிம்மராவ்

(டில்லி)

ஆளும் இந்திரா காங்கிரஸ் கட்சியே ஐந்து ஆண்டு காலத்திற்கு பதவி வகிக்கும் என பிரதம மந்திரி திரு நரசிம்மராவ் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழன் நந்தியாவில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றிலேயே அவர் இதைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் முக்கிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தனது அரசாங்கத்திற்கு ஆக்கபூர்வமான ஆதரவை நல்கியமைக்காக எல்லா எதிர்க்கட்சியினருக்கும் தனது நன்றியைத் தெரிவித்தார்.

அதைத் தொடர்ந்து ஹைதராபாத் விமானநிலையத்தில் செய்தியாளரைச் சந்தித்து உரையாடினார். செய்தியாளர் ஒருவர் அயோத்தியில் ஆலயம் கட்டுவதென்ற முடிவை செயற்படுத்தப் போவதாக விஸ்வ இந்து பரிஷத் அறிவித்திருந்தது பற்றிக் கேட்டபோது முடிவைக் கூறுவதற்கு முன் விஸ்வ இந்து பரிஷத் என்ன கூறுகின்றது என்பதை தாம் அறியவிரும்புவதாகவும் திரு. ராவ் தெரிவித்தார்.

## மீண்டும் சேவையில் இணைந்த இளைப்பாறிய ஊழியருக்கு ஓய்வு பெற்ற கால சம்பளம்

(கொழும்பு)

அரச சேவையில் மீண்டும் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ள இளைப்பாறிய அரசாங்க ஊழியர்களுக்கு அவர்கள் இளைப்பாறும்போது பெற்ற தொகை சம்பளமாக வழங்கப்படவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆகஸ்ட் மாதம் 1-ம் திகதியிலிருந்து இந்த நடைமுறை அமுலுக்கு வரவேண்டுமெனவும் பொது நிர்வாக மாகாண சபைகள் அமைச்சு அறிவித்துள்ளது.

## பசறையில் 1800 தொழிலாளர் வேலை நிறுத்தம்

(கண்டி)

பசறை ஹோபேயி தோட்டத் தொழிலாளர்கள் சுமார் 1800 பேர் கடந்த 7ஆம் திகதி முதல் வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர்.

இந்த வேலை நிறுத்தம் இருபது கோரிக்கைகளை முன் வைத்து நடைபெற்று வருகின்றது. வேலை நிறுத்தத்தை இ. தொ. கா., இல. தே. தோ, தொ. சங்கம், தொ. தே. சங்கம், விவசாய தோட்டத் தொழிலாளர் சங்கம் ஆகியவற்றைச் சேர்ந்த தொழிலாளர்கள் நடத்தி வருகின்றனர்.

...ய பிரதமர் பி. வி. நரசிம்மராவ் மாநில அரசின் இந்த அறிக்கை கிடைக்கப்பெற்றதும் அதற்கேற்ப உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் தேவைக்கேற்ப இந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

பாபர் மசூதி இயக்க ஒருங்கிணைப்பு நிர்வாகக்குழு. மற்றும் அகில இந்திய பாபர் மசூதி செயல் நிர்வாகக் குழு துறை அமைச்சரிடம் தெரிவித்தனர்.

## கப்பலில் 750 மெ. தொன் உரவகை

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறைத் துறைமுகத்திற்கு வந்து சேர்ந்திருக்கும் கப்பலில் 750 மெற்றிக் தொன் விவசாய உரவகைகள் எடுத்து வரப்பட்டிருப்பதாக அரசாங்க அதிபர் திரு. க. மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

இவ்வுரவகைகள் பெரும்போக நெற்செய்கைக்காக யாழ் மாவட்ட கமநலசேவைகள் திணைக்களத்தினூடாக விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (க)

## வவுனியாவிற்கு அரசியல்கட்சிகுழு

(கொழும்பு)

சகல அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளையும் உள்ளடக்கிய குழுவொன்று எதிர்வரும் பதினெட்டாம் திகதி வவுனியாவிற்கு வரவுள்ளது. புனர்வாழ்வு, புனருத்தாரண அமைச்சின் அனுசரணையுடன் வரும் இவர்கள், தாண்டிக்குளம் தடை முகாமையும் முருகனூர் அகதிமுகாம் ஆகிய இடங்களையும் நேரில் சென்று பார்வையிடவுள்ளனர். அத்துடன் வவுனியா அரசாங்க அதிபர் ரி. மார்க்கண்டுவையும் சந்தித்துப் பேச்சு நடாத்தவுள்ளனர்.

## நவராத்திரி பூஜை

(ஈச்சமோட்டை)

கொழும்புத்துறை மேற்கு வதிரி பீட விநாயகர் ஆலயத்தில் நவராத்திரி பூஜை சென்ற 8 ஆம் திகதி ஆரம்பமாகியது எதிர்வரும் 17ஆம் திகதி பிற்பகல் 4 மணிக்கு மானம்பூ திருவிழாவுடன் நிறைவு பெறும். (43)

## கல்வி விருத்தி அங்குரார்ப்பண கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண கல்விக் கோட்டத்தின் கல்வி அபிவிருத்திக் கழக அங்குரார்ப்பணக் கூட்டம் இன்று திங்கட்கிழமை மாலை இரண்டுமணிக்கு யாழ் இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி கூட்டத்தில் பாடசாலை அதிபர்கள், அபிவிருத்திச் சங்க செயலாளர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ் கோட்ட உதவிக்கல்விப் பணிப்பாளர் கோரியுள்ளார்.

★ ★ ★

தென்மராட்சிக்கல்விக்கோட்டத்தின் கல்வி அபிவிருத்திக் கழக அங்குரார்ப்பணக் கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை மாலை 2 மணிக்கு றிபேக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது

பாடசாலை அதிபர்கள் அபிவிருத்தி சங்க செயலாளர்களையும், பெற்றோர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு தென்மராட்சி கல்விக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

# சிறிலங்கா ஜனாதிபதி பிரேமா ராணுவத்தினருக்கு புகழாரம்

எமது இராணுவ வீரர்களது வீரதீரச் செயல்களையும் அவர்களது தன்னலம் அற்ற தியாகச் செயல்களையும் அரசாங்கமும் மக்களும் பாராட்டுகின்றார்கள் நீங்கள் படையில் சேர்ந்த நோக்கம் தியாகச் சிந்தையுடன் உங்களை அர்ப்பணித்து நாட்டைக் காப்பதற்கேயாகும். தன்னலமற்ற உங்கள் தொண்டை நாமறிவோம் நாங்களும் உங்கள் நலத்தில் அக்கறை கொண்டு போரினிலே காயப்பட்டு அங்கங்களை இழந்த உங்கள் சகோதர இராணுவ வீரர்கட்கு எம்மாலான சகல வசதிகளையும் செய்வதற்கு கடமைப்பட்டுள்ளோம் உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பனாகொடை இராணுவ வதிவிட முகாமின் நீச்சல் தடாகக் கட்டடத்தையும் விளையாட்டு மைதானத்தையும் திறந்து வைத்து பேசுகையில் சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா தெரிவித்தார்.

மேலும் அவர் பேசுகையில் எங்கள் மக்கள் உங்களை மிகவும் கௌரவிக்கிறார்கள், உங்களை மதிக்கிறார்கள். நேசிக்கிறார்கள் மக்கள் தத்தமது ஊர்களில் தெய்வ ஆசிகள் வேண்டிப் பல பூஜைகள் செய்துள்ளனர். உங்களுக்கு நாம் என்றும் கடமைப்பட்டவர்கள் உங்களை நாம் ஒரு போதும் கைவிடமாட்டோம்.

தேவையான பயிற்சித் திட்டங்களை உள்நாட்டில் மட்டுமல்லாது வெளிநாடுகளிலும் நீங்கள் பெறுவதற்கு வேண்டிய வழிவகைகளை நாம் செய்துள்ளோம்.

வீடுகளையும், காணிகளையும் நாம் தந்தபோதும் கூட நமது வீரர்களை சரிவரக் கவனித்து நஷ்டஈடு கொடுத்தவர்களாகமாட்டோம் உங்களது தியாகத்துக்கு நாம் செய்வது நிச்சயமாகப் போதாது.

## புலிகள் அதிகரிக்கவில்லை நடவடிக்கை அதிகரிப்பு

- கேணல் சரத் முனசிங்க

(கொழும்பு)

"இழக்கில் விடுதலைப் புலிகளின் எண்ணிக்கை அதிகரிக்கவில்லை. ஆனால் புலிகளின் நடவடிக்கை அதிகரித்துள்ளதென சிறிலங்கா பாதுகாப்புப்படைப் பேச்சாளர் கேணல் சரத் முனசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் பேசும்போதே சரத்முனசிங்க இதனைத் தெரிவித்தார்.

## எறிகணையால் வீடுகள் சேதம்

(பொன்னாலை)

காரைநகரில் இருந்து சிறிலங்கா இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட எறிகணைத் தாக்குதலினால் பொன்னாலை மூளாய் ஆகிய பகுதிகளில் உள்ள பொதுமக்களின் பலவீடுகள் சேதமடைந்துள்ளன.

நேற்று முற்பகலும், நேற்று முன்தினம் இரவும் மேற்படி பகுதிகளை நோக்கி நீண்ட நேரம் தொடர்ச்சியாக எறிகணைத் தாக்குதல்கள் நடைபெற்றன. (க)

### சூழல்

றிற்கு உயர்ந்து விடும் என்றும் இதன் விளைவாக பெரும் வெள்ளப்பெருக்கும், வரட்சியும், சூறாவளியும் தோன்றி சீரற்ற காலநிலை உருவாகிவிடும் என்றும் இதனால் பயிர் செய்கை பண்ணக்கூடிய நிலப்பரப்பின் அளவும் குறைந்துவிடும் என்றும், நீர்வாழ் உயிரினங்களும் அழியும் அபாயமும் இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

### மினிமுகாம்

வட்டாரங்கள் ஐந்து இராணுவத்தினர் மட்டுமே கொல்லப்பட்டதாகவும், ஏழு பேர் காயமடைந்ததாகவும் அறிவித்தது.

## 'உதயம்' ஒலிப்பதிவு நாடா நேற்று வெளிவந்தது

நிதர்சனம் வெளியீடாக உதயம் ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு விழா நிகழ்ச்சிகள் நேற்று யாழ் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றன.

இந்த ஒலிப்பதிவு நாடா தயாரிப்பதற்கு பங்களிப்புச் செய்த கலைஞர்களுக்கு விடுதலைப் புலிகள் மகளிர் படைப்பிரிவின்யாழ்.மாவட்ட பொறுப்பாளர் ஜெயந்தி அவர்கள் பரிசில்கள் வழங்கினார்.

யாழ் மாவட்ட விசேட தளபதி தமிழ்ச்செல்வன் அவர்கள் ஒலிப்பதிவு நாடாவை வெளியிட்டு வைக்க அதனை கவிஞர் வாஞ்சிநாதன் பெற்றுக் கொண்டார்.

இவ் விழாவில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலாளர் திரு யோகரட்ணம் யோகி, விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர் திரு இளங்குமரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

உதயம் ஒலிப்பதிவு நாடா தயாரித்த கலைஞர்களினரகி இசை நிகழ்ச்சியும் நடாத்தப்பட்டது. (தி)

## ஒரு பொலிஸார் சுட்டுக் கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இருதயபுரம் என்னும் கிராமத்தில் சிறிலங்கா பொலிசார் ஒருவர்விடுதலைப் புலிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார். ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தசமயமே இவர் சுட்டுக் கொல்லப்பட்டதாக தெரியவருகிறது.

### அமைச்சரவையில்

மாற்றங்கள் செய்யப்படவிருப்பதாகவும் அரசாங்க உயர் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அத்துடன் பிரேமதாசாவின் உரையும் இந்தக் கூட்டத்தில் இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்படுகிறது

### அரசியல்

லலித்முதலி ஜனாதிபதிக்கு எதிரான அரசியல் குற்றச்சாட்டுப் பிரேரணையைச் சமர்ப்பிப்பதில் மிக நெருக்கமான பங்கொன்றை சபாநாயகர் வகித்திருக்கின்றார். திஸ்ஸநாயக்க எம். பி யின் சத்தியக் கடதாசியையடுத்தே அரசாங்க பாராளுமன்றகுழு அறிக்கையூடாக அது பகிரங்கத்திற்கு வந்தது என்றார்.

இவ்விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய சுரேஸ் பிரேமச்சந்திரன் ...

## மீண்டும் தாக்குதல்

அகதிகள் முகாம்கள்மீதான தாக்குதல்கள் ஜேர்மனியில் மீளவும் ஆரம்பித்துள்ளன

ஜேர்மன் ஜனாதிபதி ஹெல்மெற் கோல் அகதிகள்முகாம்கள் மீது இனவாதிகள் மேற்கொண்டு வரும் தாக்குதல்களுக்கு கண்டனம் தெரிவித்துள்ளார்.

### துண்டுவிழும்

பாதுகாப்புக்கு இவ்வருட ஒதுக்கீட்டிலும் பார்க்க 364 கோடி ரூபாவால் அதிகரிக்கப்பட்டிருக்கிறது

இந்த வரவு செலவு திட்டப்படி சில அமைச்சுக்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி விபரம் வருமாறு.

1992ஆம் ஆண்டு பாதுகாப்பு அமைச்சுக்கான ஒதுக்கீடு 15,424,013,000

1991 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீடு 11,781,327,000

1992 இற்கான புனர்வாழ்வு அமைச்சுக்கான ஒதுக்கீடு 6,011,802,000

1991 ஆண்டுக்கான ஒதுக்கீடு 7,210,982 000

1992 இற்கு வெளிநாட்டு அமைச்சுக்கான ஒதுக்கீடு 1,03,468 000

1991-இற்கான ஒதுக்கீடு 807,022,000

இதேவேளை வடபகுதியுடன் நெருங்கிய தொடர்புடைய சக்திவலு அமைச்சு, கடற்றொழில், நீர்வள அமைச்சு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் அமைச்சு ஆகியவற்றிற்கு 1991ஆம் ஆண்டு ஒதுக்கீட்டிலிருந்து 1992 ஆம் ஆண்டு ஒதுக்கீட்டில் பெருமளவு நிதியை மிச்சம் பிடித்துள்ளமையும் இந்த வரவு செலவு திட்ட மதிப்பீட்டு ...

---

## 95ஆம் நாள் நினைவஞ்சலி

வீரஜனனம் 26-06-1972 வீரமரணம் 11-07-1991

ஆனையிறவு இராணுவ முகாம் தாக்குதலில் வீரமரணமடைந்த

### சிவஞானம் சுஜீதா [யசோ]

''வானத்துப் பூக்கள் வட்டமிட்டுக் கண்சிமிட்ட''
தேனருந்தும் சிட்டாகப் பறந்து சிறகடித்த வேளை
மானமுடன் போரடித் தமிழீழம் பெற்றிடவே
களத்தில் களம் புகுந்த காரிகையே - யசோ!

இளமையில் சருகாகிப் புதையுண்ட உன்னுடல்
வளமான தமிழீழம் மலர்வதற்கு உரமாகும் - நீ
நிழலாகி தொண்ணூற்றி ஐந்தாம் நாளின்று
தளராத உறுதியுடன் அஞ்சலி செலுத்துகிறோம்!

செட்டியவூர்,
தொண்டைமானாறு
[B/3322]

அப்பா, சகோதரர்கள்,
அன்ரிமார், பேத்தி,
மாமாமார்கள்.

---

## 90-ம் நாள் நினைவஞ்சலி

### திதியும் அந்தியேட்டியும்

வீரஜனனம் 25.01.1973



வீரமரணம் 18.07.1991

18 07-1991 இல் கட்டைக்காட்டில் சிறிலங்கா இராணுவத்துடன் நடந்த நேரடி மோதலில் இன்னுயிர் ஈந்து வீரவேங்கையாகி விட்ட

### லெப்ரினன்ட் கோவிந்தன்

[நடராசா சித்தாகுமார் (கண்ணன்)
அல்வாய் தெற்கு]

நீங்கள் சிந்திய குருதி சிலந்தி வலையில் படவில்லை

களத்தில் களம் புகுந்த காரிகையே - யசோ!

இளமையில் சருகாகிப் புதையுண்ட உன்னுடல்
வளமான தமிழீழம் மலர்வதற்கு உரமாகும் - நீ
நிழலாகி தொண்ணூற்றி ஐந்தாம் நாளின்று
தளராத உறுதியுடன் அஞ்சலி செலுத்துகிறோம்!

செட்டியவூர்,
தொண்டைமானாறு
[B/3322]

அப்பா, சகோதரர்கள்,
அன்ரிமார், பேத்தி,
மாமாமார்கள்.

---

## வடமாகாண மாற்றுச் சக்தி

# வளங்களின் ஆராய்ச்சி

தற்போது வடமாகாணத்தில் எரிபொருள் தட்டுப்பாடு காணப்படுகின்றது. இத்தன்மையே மாற்றுச் சக்தி வளங்களைத் தூண்ட வழியமைக்கின்றது. உயிரியல் வாயு, காற்றுவலுச்சக்தி சூரிய சக்தி போன்ற முறைகள் ஏற்கனவே சிலரால் நிறுவி இயங்கி வருகின்றது. இவ் உற்பத்தியில் மாதிரியாக தமிழீழ ஆய்வு நிறுவனம் செயற்படுகின்றது. யாழ் விஞ்ஞான மன்றமும் இலங்கை பொறியியலாளர் யாழ் கிளைச் சங்கமும் இணைந்து நடாத்திய கருத்தரங்கின் இறுதியில் வடமாகாண சக்தி வளங்களை ஆராய்ச்சி செய்யும் பொருட்டு ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது.

சக்தி வளங்களை விருத்தி செய்யும் நோக்கமாகவே தற்போது இக் குழு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. சக்தி உற்பத்தி நிலையங்களை பட்டியல் படுத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. தற்போது மேற்கூறிய வழிகளில் சக்தி உற்பத்தி செய்வோர் தயவு செய்து யாழ்ப்பாணம் விஞ்ஞானக்கழகம். பிரிவு "ஆ" பிரயோக விஞ்ஞானம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியுடன் கடிதத் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகிறீர்கள்.

— தமிழீழ ஆய்வு நிறுவனம்.

(B/3316)

---

18 07-1991 இல் கட்டைக்காட்டில் சிறிலங்கா
இராணுவத்துடன் நடந்த நேரடி மோதலில்
இன்னுயிர் ஈந்து வீரவேங்கையாகி விட்ட

## லெப்ரினன்ட் கோவிந்தன்
## [நடராசா சித்தாகுமார் (கண்ணன்)
## அல்வாய் தெற்கு]

நீங்கள் சிந்திய குருதி சிலந்தி வலையில் படவில்லை
சிந்தனையாளர் மன அலையில் பட்டிருக்கிறது.

வழக்காடு மன்றத்தால் வராது சுதந்திரம்
களப்பேறு ஒன்றுதான் பரிகாரம் என்றாயே!
தலைப்புதல்வா, கோவிந்தா தலை நிமிர்ந்து சென்றாயே!
களம்பல கண்ட கண்ணனே மாவீரா!
கட்டிய நாய்களல்ல! கட்டைக்காட்டில் இப்படியொரு
வாசகம்!
அது வெறும் பெயர்ப்பலகை அல்ல!
குருதி தோய்ந்து எழுதிய பாரம்பரிய கல்வெட்டு
வீர காவியம் அடங்கிய பதிவேடு!
தமிழ் அன்னை துயர்தீரத் தனிமேனி தந்தவனே!
விழிநீரில் சுமக்கின்றோம் சித்தாகுமார் உன்னால்
விடியும் நாளும் திருநாளாய் மலரும்!

முடக்கன் தோட்டம்,
அல்வாய் தெற்கு,
அல்வாய்.

- குடும்பத்தினர்

(B/3310)

---

யாழ் ஸ்ரீதர் திரையரங்கில்

## மாங்குளம் தகர்ப்பு
(விவரணப் படம்)

## இனியொரு விதி
(குறும்படம்)

ஆகியன அரங்கம் நிறைந்த காட்சிகளாக காண்பிக்கப்படுகின்றன.

தினசரி ஒரு காட்சியும் (4 மணிக்கும்) சனி, ஞாயிறுகளில் இரண்டு காட்சிகளும் (4, 6 மணிக்கும்) காண்பிக்கப்படும்.

(B/3203)

---

...திரான அரசியல் குற்றச்சாட்டுப் பிரேரணையைச் சமர்ப்பிப்பதில் மிக நெருக்கமான பங்கொன்றை சபாநாயகர் வகித்திருக்கின்றார். திவ்வியநாதன் எம். பி யின் சத்தியக் கடதாசியையடுத்தே அரசாங்க பாராளுமன்றக்குழு அறிக்கையூடாக அது பகிரங்கத்திற்கு வந்தது என்றார்.

இவ்விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய சுரேஸ் பிரேமச்சந்திரன் ஜனாதிபதிக்கு எதிரான அரசியல் குற்றச்சாட்டு மனுவில் சபாநாயகரின் இல்லத்தில் வைத்தே நாம் கையெழுத்து இட்டோம் எனத் தெரிவித்தார்.

இதேவேளை வடபகுதியுடன் நெருங்கிய தொடர்புடைய சுகாதாரம், அமைச்சு, கடற்றொழில், நீர்வள அமைச்சு, போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் அமைச்சு ஆகியன வற்றிற்கு 1991 ஆம் ஆண்டு ஒதுக்கீட்டிலிருந்து 1992 ஆம் ஆண்டு ஒதுக்கீட்டில் பெருமளவு நிதியை மிச்சம் பிடித்துள்ளமையும் இந்த வரவு செலவு திட்ட மதிப்பீட்டு அறிக்கையிலிருந்து தெரிய வருகிறது.

மேலும் இந்த அறிக்கையின்படி துண்டுவிழும் தொகை 6962 கோடியே 50 இலட்சம் ரூபா என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

---

தாவரவியல்
ஐங்கரநேசனின்
யூனிவேர்சல்
கந்தர்மடம் — யாழ்ப்பாணம்

---

## வடமராட்சி
## பாண் பாவனையாளர்களுக்கு

மிகவிரைவில் யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர்சங்க வடமராட்சிக்கிளையினால் ரூபா 8/-இற்கு மேற்படாமல் 350 கிராமிற்கு குறையாத பாண் விநியோகம் செய்வதாக சங்கம் தீர்மானித்துள்ளது. அதன் பிரகாரம் கடை உரிமையாளர் ரூபா 8/-இற்கு விற்பனை செய்ய வேண்டும். கடை உரிமையாளருக்கு 30 சதம் கழிவு வழங்கப்படும். விற்பனையாளர் கழிவு 45 சதம் வழங்கப்படும். இதனை மீறும் பேக்கரி உரிமையாளர்கள், கடை உரிமையாளர்களின் பாண் விற்பனை சங்கத்தால் தடைசெய்யப்படும். ஆகவே அனைவரும் பொதுமக்கள் நலன் கருதி தரமான பாண் விநியோகம் செய்யும்படி சங்கத்தால் வேண்டப்படுகின்றீர்கள்.

மா. கனகராசா
செயலாளர்
வடமராட்சிக்கிளை

[R/1836]

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் [illegible] வீதி, 81 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 14 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.